

# புனித தோமா விதைத்த விதை முளைக்கவில்லையா?

கிறிஸ்தவ சமயத் தலைவர்களின் கருத்துகள்



1968இல் கடவுளால் கொடுக்கப்பட்ட இந்த ஆராய்ச்சியின் முதல் வெளியீடாக திருவள்ளுவர் கிறிஸ்தவரா? என்னும் நூல் 1969இல் வெளிவந்தது. இந்த நூலுக்கு முன்னுரை வாங்கச் சென்றபோது பேராயர் R. அருளப்பா அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

1969 முதல் இந்த ஆராய்ச்சி வளருவதற்கு கடவுளுக்கு அடுத்த நிலையில், நமக்குத் துணையாக அவர்கள் காலம் முழுவதும் ஜெபித்து, இன்றியமையாத காலங்களில் உதவி, துணையாகச் செயல்பட்டு, ஆறுதலாக இருந்த சென்னை மயிலை முன்னாள் பேராயர் டாக்டர் R. அருளப்பா அவர்களுக்கு கிறிஸ்தவத் தலைவர்களின் பாராட்டுகளை நன்றியுடன் காணிக்கையாகப் படைக்கின்றோம்.

- டாக்டர் மு. தெய்வநாயகம்
நிறுவனர், திராவிட ஆன்மீக இயக்கம்.

*புனித தோமா விதைத்த விதை முளைக்கவில்லையா?*

"இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் 12 பேரில் ஒருவராகிய தோமா, நம் தமிழகம் வந்தார். 20 ஆண்டுகள் (கி.பி. 52 முதல் 72 வரை) தமிழகத்தில் நற்செய்திப் பணி ஆற்றினார். இரத்தச் சாட்சியாக மரித்தார். மயிலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டார்" என்பது இந்தியத் திருச்சபை வரலாற்றின் ஒரு பகுதி.

புனித தோமா விதைத்த நற்செய்தியாகிய விதை முளைக்கவில்லையா?

கிறிஸ்தவம் ஆசியாக் கண்டத்தில் தோன்றிய ஆசிய மதம் ஆகும்.

**ஐரோப்பிய மதம் :**

ஆனால் இன்று ஐரோப்பிய மொழிகளில், ஐரோப்பியப் பண்பாட்டில், ஐரோப்பிய அரசியலோடு கலந்து வளர்க்கப்பட்ட ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவர்களாகிய நாம், "தோமா விதைத்த விதை முளைக்கவில்லை" என்றும், "மட்கி மறைந்துவிட்டது" என்றும், அல்லது "தோமா இந்தியாவிற்கே வரவில்லை" என்றும் நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

**இந்திய மதம் :**



தோமா விதைத்த விதையானது ஆசியாக் கண்டத்திலுள்ள இந்தியாவில், இந்திய மொழிகளில், இந்தியப் பண்பாட்டில், இந்திய மண்ணில், இந்திய **மதமாக** முளைத்து, வளர்ந்து பெரும் மரமாகி இன்று இந்தியா முழுவதையும் அரவணைத்துக் கொண்டிருக்கிறது என்பது புதிய கண்டுபிடிப்பு ஆகும்.

இப்புதிய கண்டுபிடிப்பு கடவுளால் இதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட்டு வழிநடத்தப்படும் பேராசிரியர் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களால் 1968 முதல் ஆராயப்பட்டு 25க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்கள் வழியாக நிலைநாட்டப்பட்டுள்ள வரலாற்று உண்மையாகும்.

**6 மாத பயிற்சி வகுப்புகள் :**

இந்த வரலாற்று உண்மையை விளக்கி 6 மாத டிப்ளமோ பயிற்சி வகுப்புகள், டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களால் நடத்தப்பட்டன. இந்த வகுப்புகளில் பயின்றவர்களுக்கு 18:12:2004 அன்று மாலை 6:00 மணிக்கு, சான்றிதழ் வழங்கப்பட்டது. அப்போது 'இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட நூல் அறிமுகம் செய்யப்பட்டது.




சான்றிதழ் மற்றும் பட்டயச் சான்றிதழ் பெற்ற மாணவர்களில் ஒரு பகுதியினர்

## "இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு" என்பது பற்றி...

*கிறிஸ்தவ சமயத் தலைவர்களின் கருத்துகள்*

திராவிட ஆன்மீக இயக்கத்தைச் சேர்ந்த அதன் அமைப்பாளர் **அருள்தந்தை P. அமல்ராஜ்** அவர்களும் அதன் நற்செய்திப் பயிற்சி முதல்வர் **திரு. S. சந்திரசேகரன்** அவர்களும் *இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே....* எனும் டாக்டர் தெய்வநாயகம் அவர்களின் 36 ஆண்டுகால புதிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைக் குறித்த வரலாற்று அறிமுகம், மற்றும் அவரது ஆய்வுப் போராட்டங்களின் அறிமுக விழாவை, 18 டிசம்பர் 2004 அன்று சென்னை, குருகுல் லூத்தரன் இறையியல் கல்லூரியில் மாலை 6.00 மணியளவில் நடத்தினர்.

- நூல் அறிமுகம்
- நூலாசிரியரின் அறிமுகம்
- இந்நூல் உருவாகக் காரணமான 36 ஆண்டுகால ஆய்வுப் போராட்டங்களின் அறிமுகம்
- இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் நடத்தப்பட்ட வகுப்புகளில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் பட்டயச் சான்றிதழ் வழங்கல்

ஆகியவை இவ்விழாவில் இடம் பெற்றதுடன், அன்று காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை "இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே.... எவ்வாறு?" எனும் தலைப்பில்

- ஒருநாள் வகுப்பும் நடத்தப்பட்டது.




இவ்விழாவில், 1968 முதல் 36 ஆண்டுகள் ஆய்வுப் போராட்டம் நடத்தியுள்ள

பேராசிரியர் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களின் முயற்சிகளை அறிமுகப்படுத்தி, பாராட்டி,

**சென்னை மயிலை கத்தோலிக்கப் பொறுப்புப் பேராயர்**

**டாக்டர் லாரன்ஸ் பயஸ் அவர்கள்,**

பேராசிரியரை வழிநடத்தும் கடவுளுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே... எவ்வாறு?

என்னும் நூலை,

**இந்திய சுவிசேஷ திருச்சபைப் பேராயர்**

**டாக்டர் எஸ்றா சற்குணம் அவர்கள்**

அறிமுகப்படுத்தினார்கள்.

இந் நூலை உருவாக்கியவரின் நன்முயற்சிகளுக்காகக் கடவுளுக்கு நன்றி தெரிவித்து,

**சென்னை - சி.எஸ்.ஐ. திருமண்டலப் பேராயர் அம்மா**

**மறைதிரு ஜோன் தேவசகாயம் அவர்கள்**

நூலாசிரியரையும் வாழ்த்தினார்கள்.

இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே....... எவ்வாறு? என்னும் தலைப்பில் நடத்தப்பட்ட ஆறு மாத வகுப்புகளில் பங்கேற்ற நற்செய்தி ஊழியர்களை ஆசீர்வதித்து,

**சென்னை - அப்போஸ்தல கிறிஸ்தவ சபை**

**தலைமைப் போதகர் M.K. சாம் சுந்தரம் அவர்கள்**

மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்கள்.

**குருகுல் லூத்தரன் இறையியல் கல்லூரி முதல்வர்**

**மறைதிரு டாக்டர் மானி சாக்கோ அவர்கள்**

ஆறு மாத டிப்ளமோ பயிற்சியில் வெற்றி பெற்றவர்களை, ஆசீர்வதித்து, அவர்களுக்குப் பட்டயச் சான்றிதழ் வழங்கினார்கள்.

இனி, அவர்கள் ஒவ்வொருவரும் ஆற்றிய சிறப்புரையின் சுருக்கத்தைக் காணலாம்.

## டாக்டர் லாரன்ஸ் பயஸ்

சென்னை - மயிலை கத்தோலிக்கப் பொறுப்புப் பேராயர்,

- டாக்டர் தெய்வநாயகம் அவர்களை 1982ஆம் ஆண்டிலிருந்தே நன்கு அறிந்திருக்கிறேன்.
- 1982ஆம் ஆண்டில் நான் புதிய குருவாக, வரலாற்றுச் சிறப்புமிக்க தோமையர் குன்றில் அமைக்கப்பட்ட ஆலயத்திலே உதவி பங்குத் தந்தையராகப் பணிபுரிந்தேன்.
- அப்போது, எங்கள் குருவானவர் இல்லத்தின் அருகில் இருந்த பெரிய அறையில், அந்தக் காலத்திலேயே டாக்டர் தெய்வநாயகம் என் அழைப்பை ஏற்று வகுப்புகள் நடத்தினார்.
- அதன் பின்பு அவருடைய வெளியீடான திராவிட சமய இதழைப் படித்தேன்.
- அவருடைய கருத்துகளையும் ஆய்வுகளையும் என்னோடு பகிர்ந்து கொள்வார்.
- 'இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே' என்பதை டாக்டர் தெய்வநாயகம் ஆணித்தரமாக நிலைநாட்டியுள்ளார்.
- அவரிடம் எனக்கு மிகவும் பிடித்தது என்னவென்றால், அவருடைய கருத்துகளையும் எண்ணங்களையும் ஆய்வுகளையும் எந்த ஒரு கூட்டத்திலும் விவாதிக்க, பதில் சொல்ல, நிலைநாட்ட தயாராக இருக்கின்றார் என்பதே.
- ஆகவே, எந்தவொரு கூட்டமாக இருக்கட்டும், பிராமணர்களின் கூட்டமாக இருக்கட்டும்; அங்கேயும் அவர்களுடைய புதிய ஆராய்ச்சிக் கருத்துகளை யார் மீதும் திணிக்காமல் ஆய்வு பூர்வமாக, விவாத பூர்வமாகவே நிலைநாட்டியுள்ளார். இதுவே, அவர்களிடம் எனக்குப் பிடித்த அம்சம். ஆகவே, என்னால் இயன்றவரை உற்சாகப்படுத்துகின்றேன்.



- அவரும் அவருடைய மகள் முனைவர் கலா அவர்களும் புதிய புதிய உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள்.
- இயேசு கிறிஸ்துவின் செய்தி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவிற்கு வந்துவிட்டது. ஆனால் கிறிஸ்தவர்கள் 2.3

சதவிகிதம்தான் இருக்கின்றார்கள். அப்படியானால், தோமா வழி கிறிஸ்தவத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

- சைவர், வைணவர் அனைவரும் மறைமுகக் கிறிஸ்தவர்கள்.
- ஐயா தெய்வநாயகம் அவர்களுடைய ஆராய்ச்சியும் இந்தப் புதிய கண்டுபிடிப்புகளும் இந்தக் கால கட்டத்திற்கு மிக மிக அவசியம். நம் அனைவருக்கும் தேவையானது.
- "உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" எனும் அறிவிப்பிற்கு, ஐயா தெய்வநாயகம் அவர்களின் புதிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், இந்தக் காலத்தில் மிகவும் தேவையானது.
- ஆகவே, திருத்தூதர் தோமா வழி பரவிய இந்தக் கிறிஸ்தவம் வளர வேண்டும் என்று ஜெபிக்கின்றோம்.
- இந்தப் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்றோருக்கு வாழ்த்துகள்.

## டாக்டர் எஸ்றா சற்குணம்

பேராயர்,
இந்திய சுவிசேஷ திருச்சபை.




- டாக்டர் தெய்வநாயகம் அவர்கள் 30, 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து சொல்லி வருகின்ற ஆய்வுக் கருத்துகள் இவை.
- அவருடன் இணைந்து அவர் மகள் டாக்டர் தேவகலாவும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.
- ஐயா தெய்வநாயகம் அவர்கள் முதலில் திருவள்ளுவர் கிறிஸ்தவரே என்று தமது புதிய ஆய்வைக் கூறினார்.
- இதன் பின்பு சைவமும் வைணவமும் மகாயான பௌத்தமும், ஆதி இந்தியக் கிறிஸ்தவம்தான் எனும் ஆராய்ச்சி உண்மையைக் கண்டறிந்து இவர் நிலை நாட்டியுள்ளார். இவர் மகளும் இவ்வாறே ஆராய்ச்சிப் பணியில் தந்தையாரோடு இணைந்து செய்து வருகின்றார்.

- பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு மாதிரி, பௌத்தம் கிறிஸ்தவத்தின் தாக்கத்தால், ஹீனயானம், மகாயானம் என்று பிரிந்தது என்கின்றனர்.

- டாக்டர் தெய்வநாயகத்தின் ஆராய்ச்சிக் கருத்துகள், பேராயர் லாரன்ஸ் பயஸ் அவர்கள் கூறியதுபோன்று, உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்கும் நல்லதொரு கருவியாக உள்ளன.

- பழமையான சைவ, வைணவ சமயங்களுக்கு அடிப்படையான ஐந்து கோட்பாடுகளும் [ 1) மூவொருமை, 2) அவதாரம், 3) பலிநிறைவேற்றம், 4) பாவமன்னிப்பு, 5) விசுவாசத்தின் வழி மீட்பு ] கிறிஸ்தவக் கோட்பாடுகள் என்கின்றார் டாக்டர் தெய்வநாயகம்.

- கிறிஸ்தவத்தில் பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் என்பது சைவத்தில் அப்பன், அம்மை, மகன் என்றும் வைணவத்தில் மும்மூர்த்தி என்றும் விளக்கப்பட்டுள்ளது எனும் டாக்டர் தெய்வநாயகத்தின் ஆராய்ச்சிக் கருத்துகள் இப்புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளன.

- இவரும் இவருடைய மகளும் இந்த விதமான ஆராய்ச்சிப் பணியில் ஆழமாக ஈடுபட்டுள்ளார்கள். இவருடைய அருமை மகள் விவாகம் செய்துகொள்ளாமல், கிறிஸ்துவுக்கென்று தம் வாழ்க்கையையே அர்ப்பணித்து, ஆராய்ச்சி ஊழியம் செய்வதை நாம் பாராட்ட வேண்டும்.

- மேலும் இவர், [ சாதி ஏற்றத்தாழ்வை உருவாக்கிய ] சங்கரமடத்திற்கு 108 கேள்விகளை, முன்பே கேட்டுள்ளார். இவருடைய 108 கேள்விகளுள், ஒரு கேள்விக்காவது சங்கராச்சாரியார் பதில் சொல்லியிருந்தால் இன்றைக்கு "உள்ளே" போயிருக்க மாட்டார்.

- மொத்தத்தில் இவர்களுடைய சிறந்த, இந்த ஆராய்ச்சிப் பணி தொடர வாழ்த்து தெரிவிக்கின்றேன். இதற்காக ஜெபிக்கின்றேன்.

# மறைதிரு ஜோன் தேவசகாயம்

பேராயர் அம்மா,
சி.எஸ்.ஐ. திருமண்டலம்,
சென்னை.

⌘ இயேசு கிறிஸ்துவை உலகெலாம் அறிவிக்க வேண்டும் எனும் கட்டளைக்கேற்ப, இந்நற்செய்திப் பணியை, ஆராய்ச்சி அடிப்படையில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்பவர்கள் வேறு யாருமல்லர், ஐயா தெய்வநாயகம் அவர்களும் அவருடைய அருமைப் புதல்வி தேவகலாவும் ஆவர்.

⌘ பொதுவாக நாம் அறிந்தது, காண்பது ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவம்தான். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு, இயேசு கிறிஸ்துவோடு உண்டு, உறங்கி, உறவாடி, அவரிடம் அன்பாயிருந்த புனித தோமா இந்நாட்டிற்கு வந்து, இங்குள்ள மக்களை இறைவன்பால் வழி நடத்தினார். அவருடைய ஆழமான பணிகளை, புதையலைத் தோண்டி எடுப்பதுபோல் ஆழ்ந்த ஆய்வு செய்து உண்மைகளைக் கண்டு பிடித்து எடுத்துரைத்தவர் ஐயா அவர்களும், அவருடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அன்புத் தங்கை தேவ கலாவும் என்பதை இங்கு மிகவும் மகிழ்வோடு கூறுகிறேன்.

⌘ அருமைத் தங்கை தேவகலா அவர்கள், தாம் கண்டறிந்த உண்மைகளைத் தம்மோடு வைத்துக் கொள்ளாமல், தன் தந்தையாரோடு இணைந்து, அவருடைய அரிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை நம்மோடு பகிர்ந்து கொள்வதற்காக நூல் வடிவில் வெளிக்கொண்டு வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாகவும், கிறிஸ்தவ உலகிற்கே சவாலாகவும் உள்ளது.



⌘ மிகுந்த அர்ப்பணிப்புடனும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடனும் இவர்கள் வெளிப்படுத்தும் சிந்தனைத் துளிகள் ஓரளவிற்காவது நம் திருச்சபை மக்கள் மத்தியிலே பரவ வேண்டுமே எனும் ஆதங்கத்தில், ஏறக்குறைய 2000 சகோதரிகள் கலந்து கொண்ட மாநாட்டிலே, 'இந்தியக் கலாச்சாரமும் கிறிஸ்தவ மார்க்கமும்' எனும் தலைப்பில் 3 நாட்கள் சிறப்புரையாற்றுமாறு தங்கை தேவகலாவை அழைத்திருந்தேன்.

⌘ நம் திருச்சபைக்குக் கடவுள் இவர்களைக் கொடுத்திருப்பதன் மூலம், இவர்களுடைய

அர்ப்பணிப்புடன் கூடிய ஆராய்ச்சியின் மூலம், நம்மிடையே உள்ள மத பேதங்கள், காழ்ப்புணர்வு, சாதிப் பிரிவுகள், பெண்ணடிமைத்தனம் போன்றவை களைந்தெறியப்படுவதற்கு கடவுள் வழி வகுத்துள்ளார்.

⌘ எனவே, மறைந்து கிடக்கும் உண்மைகள் பலவற்றை முழுமையான உண்மைகளை மேலும் மேலும் வெளிக் கொண்டுவர, வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

⌘ இவ்வாறு வெளிக்கொண்டு வரும்போது, எவ்வளவோ எதிர்ப்புகளும், விவாதங்களும் ஏற்படுவது இயல்பே. எத்தனை பேர் இதை மறைக்க முயன்றாலும், எவ்வளவுதான் காரிருள் சூழ்ந்து கொண்டாலும், சந்திரன் தன் முழு வடிவுடன், முழு ஒளியுடன் வீசுவதுபோல இந்த ஆராய்ச்சிப் பணியும் ஒளியுடன் உலகம் முழுவதும் வீச, வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

⌘ இந்த அரிய ஆராய்ச்சிப் பணிக்கு நான், இவர்களுக்குத் தோள் கொடுக்கிறேன். இதற்காகத் தொடர்ந்து ஜெபிப்பேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## பாஸ்டர்

## M.K. சாம் சுந்தரம்

*தலைமைப் போதகர்,*
*அப்போஸ்தலக் கிறிஸ்தவ சபை,*
*சென்னை.*




⌘ டாக்டர் தெய்வநாயகம் அவர்களை முன்பிருந்தே அறிந்திருக்கிறேன். சிறப்புத் தன்மை வாய்ந்த ஒரு தேவ மனிதன் அவர். அவருடைய மகளும் அப்படியே. அவரையும் பார்த்து பேசியிருக்கிறேன்.

⌘ இப்படிப்பட்ட தேவ மனிதர்கள் நமக்கு இந்தக் காலத்தில் நம் இந்தியாவிற்குத் தேவை.

⌘ அவருக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் மற்றும் சிறந்த அறிவு வேதத்தில் மாத்திரமல்ல. மற்ற நூல்களிலும்தாம். நன்கு கற்றறிந்த, சிறப்புத் தன்மை வாய்ந்த தேவ மனிதன் அவர்.

⌘ எங்களைப் போல் இருப்பவர்கள் சபை ஊழியம்தான் செய்கிறோம். ஆனால், இந்திய நாட்டில் சரித்திர பூர்வமாக, இந்த நாடு ஒரு கிறிஸ்தவ நாடாக இருக்கிறது என்பதை ஆழ்ந்த ஆராய்ச்சி அடிப்படையில், இந்த நூலில் எழுதியிருக்கிறபடி, தெளிவாகக் கூறியுள்ளார். இதில் எங்களுக்குச் சந்தேகம் இல்லை.

⌘ இந்த ஆழ்ந்த உண்மையை எங்களைப் போன்றோர் தெளிவாக விளக்குவது கடினம். ஐயாவைப் போல, மகளைப் போல, ஆராய்ச்சி அடிப்படையில் நிரூபித்து எழுதும்போது யாரும் எதிர்க்க முடியாது.

⌘ அவருடைய அறிவு, ஞானம் இவற்றை யோசித்துப் பார்க்கும் போது, மிகப் பெரிய கிருபையை ஆண்டவர் அவருடைய தாசனுக்குக் கொடுத்திருக்கிறார் என்று உள்ளத்தின் ஆழத்திலிருந்து, கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

⌘ அது மாத்திரமல்ல. தொடர்ந்து இந்த அரிய ஊழியத்திற்காக ஜெபிப்பேன் என்று வாக்குறுதி அளிக்கின்றேன். இதற்காகக் கர்த்தரில் மகிழ்கிறேன்.

⌘ இந்த தேசத்தின் அதிகாரிகளுக்கு இவை தெரியப்படுத்தப்பட வேண்டும். யாரும் எதிர்பேச முடியாத அளவிற்கு, நிரூபித்து, உறுதிபடுத்தி பேசக் கூடிய திறமையை, தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்.

⌘ இந்த இயக்கம் தொடர்ந்து வெற்றியோடு, சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த இயக்கத்திற்கு என் ஆசி எப்பொழுதும் உண்டு.

⌘ ஐயா அவர்களின் புதிய கண்டுபிடிப்புகளை, ஆராய்ச்சி உண்மைகளை விளக்கிக் கூறும் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்று சான்றிதழ் பெறும் அன்பர்கள் அனைவரும் ஊழியத்தில் ஓங்கி வளர ஆசீர்வதிக்கின்றேன்.

## *மறைதிரு டாக்டர் மானி சாக்கோ*

*முதல்வர்,*
*குருகுல் லூத்தரன் இறையியல் கல்லூரி, சென்னை.*



⌘ பொதுவாக, தமிழர் கூட்டங்களில் நான் கலந்து கொள்வதில்லை. மற்றவர்கள் தமிழில் பேசும்போது புரிந்து கொள்வேன். ஆனால் எனக்குத் தமிழ் பேசத் தெரியாது. ஆனால், இங்கு முக்கியமாக நான் வந்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

⌘ ஒன்று, அருமை நண்பர் டாக்டர் தேவகலாவிற்கு நான் 'எபிரேயம்' (Hebrew) சொல்லிக் கொடுத்த போது, எதையும் கேள்விகள் மேல் கேள்விகள் கேட்டு, ஆழ்ந்த ஆராய்ச்சி அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்ளும் ஒரு பெண்மணி என்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைந்தேன்.

⌘ இவர்கள் இக்கல்லூரிக்கு (குருகுல் லூத்தரன் இறையியல் கல்லூரி, சென்னை) வருமுன் இவர்களைப் பற்றியோ, இவர்களின் தந்தையார் டாக்டர் தெய்வநாயகத்தைப் பற்றியோ எனக்குத் தெரியாது. ஆனால், மிகுந்த அர்ப்பணிப்புடன் இவர்கள் செய்யும் ஊழியத்தின் ஆழத்தைப் பற்றி அறிந்தபோதோ மிகுந்த மகிழ்ச்சி கொண்டேன். எனவே, அவர்கள் அழைத்தவுடன் மகிழ்வோடு இங்கு வந்தேன்.

⌘ இரண்டாவதாக, நான் பிறந்த கேரளாவிற்குப் புனித தோமா வந்து விதைத்த கிறிஸ்தவத்தைவிட, தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவம் / திராவிடக் கிறிஸ்தவம் மிகப் பழமையானது என்பதை அறிந்தபோது மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

⌘ தோமா விதைத்த விதையால் இந்தியா கிறிஸ்தவ நாடாக வளர்ந்துள்ளது என்று இவர்கள் கூறுவது சாதாரணமான ஒரு 'Statement' (கூற்று) அல்ல. இது ஒரு 'Joke' ('ஜோக்'கும்) அல்ல. ஆழ்ந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் நிலைநாட்டிய உண்மையாக இருக்கின்றது. ஏனெனில், இது தொடர்பாக இவர்கள் கொடுத்த வெளியீடுகள் சிலவற்றைப் படித்து பார்த்தபோதுதான் இதை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

⌘ எனவே, இந்தியா கிறிஸ்தவ நாடாக வளர்ந்து உள்ளது எனும் இவர்களுடைய புதிய ஆராய்ச்சி அடிப்படையிலான கண்டுபிடிப்பு, சாதாரணமான கூற்று அல்ல. மிக ஆழ்ந்த ஆராய்ச்சியில் இவர்கள் நிலைநாட்டியுள்ள, மறுக்க முடியாத, சான்றுகளுடன் கூடிய, ஏற்றுக்கொள்ள ஏதுவான உண்மைகளாகும்.

⌘ இந்துமதமும் பௌத்தமும் [ மகாயானம் ] தோமா வழி கிறிஸ்தவத்தின் கிளைகள் என்பதைச் சான்றுகளுடன் கூடிய அவர்களின் ஆராய்ச்சி அடிப்படையில் அறியும்போது மிகவும் ஆச்சரியப்பட்டேன். இவர்கள் இருவருக்கும் கொடுக்கப்பட்ட ஞானத்திற்காக, அர்ப்பணிப்பிற்காக, கடவுளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

⌘ இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடாக மாறப் போகின்றது என்பதை நான் ஜெபத்தோடு உறுதியாகச் சொல்லுகிறேன்.

⌘ நான் இவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபிப்பேன். கடவுள் இவர்களை ஆசீர்வதிப்பாராக. இவர்களுடைய ஊழியத்தை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

⌘ தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ பயிற்சி வகுப்பில் படித்து, சான்றிதழ் பெறுகின்ற அனைவருக்கும் வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

⌘ அவர்கள் அனைவரும் இந்தியா ஒரு தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே என்பதைக் கூறி, நற்செய்தி அளிக்க வாழ்த்துகிறேன்.

# புனித தோமா வழி கிறிஸ்தவமும் இந்திய சமயங்களும்

| | |
|---|---|
| சிந்துவெளி - திராவிட நாகரிகம் | கி.மு. 2500 |
| பௌத்தம், சமணம் | கி.மு. 600 |
| உரோமப் பேரரசுடன் தென் இந்தியா கடல் வழி வணிக உறவு. | கி.மு. 400 |
| தமிழ்ச் சங்க இலக்கியங்கள் - சாதி ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் | கி.மு. 300 |
| புஷ்யமித்திரன் திராவிட ஆட்சியை சூழ்ச்சியாகக் கைப்பற்றல் - சுங்க வம்சம் நிறுவுதல் - ஆரிய வழிபாடு | கி.மு. 183 |
| இந்தியாவில் புனித தோமாவின் வருகையும் நற்செய்திப் பணியும் | கி.பி.1 ஆம் நூற்றாண்டு |
| கிறிஸ்தவத்தால் பௌத்தத்தில் - மகாயான பௌத்தம் உருவாதல். சமணத்தில் - சுவேதாம்பர சமணம் உருவாதல் | |
| முதல் சமஸ்கிருதக் கல்வெட்டு (கி.பி. 150) - வடக்கில் சிற்பங்கள் | கி.பி.2 ஆம் நூற்றாண்டு |
| தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ முதல் நூல் திருக்குறள் | |
| வியாசர் : வேதங்கள் தொகுத்தல் - தெற்கில் சீரியக் கிறிஸ்தவம் | கி.பி. 400 |
| புனித தோமா அடக்கம் செய்யப்பட்ட மயிலையிலிருந்து தமிழ் பக்தி இயக்கம் (சைவம், வைணவம்) உருவாதல் - தெற்கில் சிற்பங்கள் | கி.பி. 500 |
| ஆரிய ஆட்சி - 'ஆரியவர்த்தம்' உருவாக்கப்படல் - 'மனுநூல்' | கி.பி. 700 - கி.பி. 900 |
| சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை - ஆதிசங்கரர் - அத்வைதம் - சங்கரமடம் - சைவ, வைணவ சமயங்கள் எனப்படும் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவம் ஆரியருக்கு அடிமைப்படுத்தப்படல். | |
| தெற்கில் சோழ ஆட்சி - திராவிட நூல்களுக்கு ஆரிய நோக்கில் தவறான உரைகள். | கி.பி. 1200 - கி.பி. 1400 |
| தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ இறையியல் நூல்கள் - சைவ சித்தாந்தம் - சிவஞானபோதம் | |
| ஐரோப்பியப் பேரரசு - சர். வில்லியம் ஜோன்ஸ் 'மனுநூலை', கி.பி.1794இல், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் 'இந்துத்துவமும்', 'இந்து மதமும்', - ஐரோப்பிய வழி இந்தியக் கிறிஸ்தவம் | கி.பி.18 நூற். - கி.பி.20 நூற். |

*டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களின்*

# ஊழியத்தின் பாதை

*நிறுவனரைக் குறித்து...*

*"....நான் தீர்க்கதரிசியுமல்ல; தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாய் இருந்தேன். ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து......."* – *ஆமோஸ் 7 : 14, 15*

என்ற வேத வசனத்தின்படி,

திராவிட ஆன்மீக இயக்க நிறுவனர் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் கல்வியறிவு மிகுந்த குடும்பத்திலோ, கிறிஸ்தவ குடும்பத்திலோ பிறக்காமல், ஓர் எளிய இந்து குடும்பத்தில் பிறந்தபோதிலும் இந்திய ஆன்மீக வரலாற்றில் மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிப்படுத்தும் ஆராய்ச்சி ஊழியத்திற்கென கர்த்தரால் அழைக்கப்பட்டு வழி நடத்தப்பட்டு வருகின்றார்.

இவர் 1953இல் தனது 18ஆவது வயதில் இறைமகன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, இரட்சிக்கப்பட்டார்.

1968 மார்ச் மாதம் ஆய்வுப் பணி ஊழியத்திற்காக கடவுளின் தெளிவான அழைப்பைப் பெற்றார்.

1969இல் 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்னும் தனது முதல் ஆய்வு நூலை எழுதி வெளியிட்டார். இதற்குக் கிறிஸ்தவர் நடுவிலும் எதிர்ப்பு எழுந்தது. ஆனால் இறையருளால், அவர் தொடர்ந்து எழுதிய

- ⌘ ஐந்தவித்தான் யார்?
- ⌘ வான் எது?
- ⌘ நீத்தார் யார்?
- ⌘ சான்றோர் யார்?
- ⌘ எழுபிறப்பு?

என்ற ஆய்வு நூல்கள் மூலம் "திருக்குறள் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நூலே' என்பதை நிலைநாட்டினார்.

## திருவள்ளுவர் கிறித்தவரா - விவாதம்:



சென்னை, மதுரை, அண்ணாமலை, திருப்பதி வெங்கடேசுவரன் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த 37 தமிழ் அறிஞர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு, 1972 மே மாதம் 3, 4 நாட்களில், சென்னைக் கிறிஸ்தவக் கலைத் தொடர்பு நிலையத்தில், அதன் தலைவர் அருள்திரு. சா. சுவிசேஷமுத்து அவர்களின் நன்முயற்சியால், இந்த 6 நூல்கள் மீதும் ஓர் "ஆய்வு மாநாடு" நடத்தப்பட்டது. மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் மாநாட்டுச் சிறப்புத் தலைவராகக் கலந்த கொண்டார்.

"இப்புத்தகங்கள் தடைசெய்யப்பட வேண்டும்; ஆசிரியர் இனி நூல் எழுதக் கூடாது;....." என்று தமிழ் அறிஞர்கள் சிலர் கூறினர்.

டாக்டர் அவர்களின் புலமையைப் பாராட்டினார்கள்; அவர் காண்பிக்கும் முடிவுகளுக்கு, அவர் தர்க்க ரீதியாக அறிஞர்களின் பலமேற்கோள்களுடன் நடத்திச் செல்லும் முறையைப் பாராட்டினார்கள். ஆனால், "முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை" என்றனர் சிலர்.

"முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை" என்பதற்கான தகுந்த காரணங்களை எவரும் சொல்லவில்லை; சொல்ல முடியவுமில்லை.

## திருக்குறள் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நூலே - நிலைநாட்டியமை :

சற்றும் சளைக்காத டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள்,

- ⌘ இயல்புடைய மூவர் யார்?
- ⌘ அருட்செல்வம் யாது?
- ⌘ பொருளிலக்கணமும், பொதுமறையும்
- ⌘ திருக்குறளும் பைபிளும்

என்ற நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவருடைய ஆய்வு நூல்களைப் பற்றி ஆராய ஒரு தனித் தலைப்பு கொடுக்கப்பட்டது. அதன்படி "இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சி" எனும் தலைப்பில் Ph.D., ஆய்வு செய்த தி.சு. சத்தியம் அவர்கள்,

"கிறிஸ்தவ சமய ஆய்வில் மு. தெய்வநாயகம் மிகுதியான ஆய்வு நூல்களைப் படைத்துள்ளார்..... இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்குறளின் உட்கிடக்கை சைவ சித்தாந்தமே என்று எழுந்த ஆய்வுப் போக்கு இன்றைய காலகட்டத்தில் கிறித்தவமே குறளின் உட்கிடக்கை என்ற கருத்துப் போக்கைப் பெற்று முடிந்துள்ளது"

என்று முடிவு கூறினார். இந்த ஆய்விற்காக அவருக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் 1979இல் டாக்டர் பட்டம் அளித்தது.

இப்படியாக, "திருக்குறள் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நூலே" என்பதைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களே ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஆணித்தரமாக நிலைநாட்டினார் டாக்டர் மு. தெய்வநாயகம். 1972-ஆம் ஆண்டு "கடவுள் எல்லா மதங்களையும் கடந்தவர்" என்பதை உணர்த்தும் இறைக் காட்சியை டாக்டர் அவர்கள் பெற்றார்.

1979-இல்,

"தமிழ் இனம் எனும் திராவிட இனத்திற்குப் புத்துயிர் கொடுக்கப் போகின்றேன். இதைச் செயல்படுத்தும் கருவியாக நீ பயன்படுவாய்; உடனே இதை எழுதி வைத்துக் கொள்" என்று டாக்டர் தெய்வநாயகத்திடம், "இன விடுதலையோடு கூடிய ஆன்மீக விடுதலைப் பணி" என்னும் தன்னுடைய திட்டத்தைக் கடவுள் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்.

கடவுளுடைய வெளிப்பாட்டையும், தரிசனத்தையும் அப்படியே அவர் எழுதி வைத்துள்ளதால், இன்றைக்கும் அவற்றை எழுத்துருவில் காணலாம்.

## இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே - நிலைநாட்டியமை:

மேலும், தெய்வநாயகம் அவர்கள் "விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு" எனும் தலைப்பில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து, 1985ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்றார். அந்த ஆய்வேட்டில்,

"திராவிட வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட பைபிளை மையமாகக் கொண்டு எழுந்ததே சைவம், வைணவம் என்னும் பக்தி இயக்கம். எனவே, இந்துமதம் எனப்படும் சைவ, வைணவ சமயங்கள் தோமா வழித் திராவிடக் கிறிஸ்தவக் கிளைகளே"

என்பதை நிலைநாட்டி இருந்தார். இதனால் அப்போது தமிழகம் எங்கும் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது.

தருமபுர ஆதீனத்திலுள்ள அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் 1986 டிசம்பர் 6, 7 ஆகிய இரு நாட்களில் டாக்டர் தெய்வநாயகம் அவர்களது Ph.D., ஆராய்ச்சி ஏட்டின்மீது கருத்தரங்கம் ஒன்றை ஒழுங்கு செய்தது. தருமை ஆதீனம் சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தொடக்கவுரை ஆற்றினார். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் 'முதன்மை உரை' ஆற்றினார். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட சுவாமிகள் தொடர்புரை ஆற்றினார்.

கேள்விக் கணைகளைச் சரமாரியாகத் தொடுத்தனர்.

"கேள்விகளுக்கான பதில்களை விவிலியத்தில் இருந்தோ, திருக்குறளில் இருந்தோ கொடுக்கக் கூடாது; சைவ சித்தாந்த சாத்திரங்களில் இருந்து மட்டுந்தான் கொடுக்க வேண்டும்" என்று நிபந்தனை விதித்தனர்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் ஒன்றையும் பார்க்காமலேயே, மடைதிறந்த வெள்ளமென ஐயா அவர்கள் பதில் சொல்வதைக் கண்டு, அறிஞர் பெருமக்கள் திகைத்தனர்.

இரண்டு நாட்களும் நடைபெற்ற விவாதங்களை, காமராசர் பல்கலைக் கழக, சைவ சித்தாந்தத் துறைப் பேராசிரியர் டாக்டர் டி.பி. சித்தலிங்கையா அவர்கள் தொகுத்துரைத்தார்கள்.

**அவர் தொகுத்துரைத்த கருத்துகளில் குறிப்பிடத்தக்கவை:**

- ⌘ இரண்டு நாட்களாக ஒரு நல்ல ஆய்வரங்கம் இங்கே இடம் பெற்றது.
- ⌘ அறிஞர்கள் பலர் எழுப்பிய வினாக்களுக்கு டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் விடை தந்தார்கள்.
- ⌘ புதிதாக ஒன்றைச் சொல்லுகின்றபொழுது உடனே ஏற்றுக் கொள்ளுகின்ற பக்குவம் மனிதர்களாகிய நமக்கு இன்னும் ஏற்படவில்லை.
- ⌘ டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் கூறியதுபோல, புதிதாக விளக்கம் தேடுகின்ற ஒரு முயற்சியினுடைய தொடக்கம் இது என்ற வகையிலே, இந்தத் தொடக்கம் மிக நன்றாக அமைந்தது.
- ⌘ புதிய கருத்துகளை ஏற்றுக் கொள்ளவும் பழைய கருத்துகளை விட்டுக் கொடுப்பதற்கும் நமக்குச் சில ஆண்டுகள் தேவைப்படலாம்.

இறுதியில், டாக்டர் தெய்வநாயகம் அவர்களுக்கு, தருமை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்தி, சிறப்புச் செய்தார். இந்நிகழ்ச்சி முழுவதும் வீடியோ செய்யப்பட்டுள்ளது. அதை இன்றும் கண்டு களிக்கலாம்.

இப்படியாக,

**'திருக்குறள் தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நூலே'**

என்பதையும்,

**'இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே'**

என்பதையும்,

ஆராய்ச்சி அடிப்படையில் டாக்டர் தெய்வநாயகம் நிலைநாட்டியுள்ளார்.

### சங்கரமடத்தோடு போராட்டம் :

தோமா வழி திராவிடக் கிறிஸ்தவத்தின் கிளைகளாகிய சைவ, வைணவ சமயங்களை அடிமைப்படுத்தி இருக்கும் மனுநூல் கொள்கையைக் காக்கும் ஸ்மார்த்த மடமான சங்கரமடத்தை எதிர்த்து 1994 முதல் போராட்டத்தைத் தொங்கினார்.

1996-இல், "சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன்?" என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார். பின்பு, சங்கரமடத்திற்கு 108 கேள்விகள் என்ற புத்தகம் எழுதப்பட்டு,

1. இந்தியாவிலுள்ள 5 சங்கர மடங்கள்
2. தமிழ்நாடு முதலமைச்சர்
3. தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள்
4. இந்தியப் பிரதம மந்திரி
5. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள்
6. ஐக்கிய நாடு சபை தலைவர்

முதலியவர்களுக்குத் தக்க கடிதங்களுடன் அனுப்பப்பட்டன.

### சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால் :

'சங்கராச்சாரியாருக்கு ஒரு சவால்' என்ற துண்டு வெளியீட்டுடன் 'இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே' என்பதை உங்களால் மறுக்க முடியுமா? என்று கேட்டு 31-3-2003 அன்று மடத்திற்கு அனுப்பப்பட்ட, கேள்வியுடன் கூடிய கடிதம் 2-4-2003 அன்று சங்கரமடத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

### 31-3-2003 அன்று சங்கர மடத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பகுதிகள் சில.....

"சங்கரமடம் ஆரிய பிராமணக் கொள்ளைக் கூட்டத்தின் தலைமை இடம் என்பது 1996 முதல் எங்களால் நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்கள், மற்றும் "சங்கரமடத்துக்கு 108 கேள்விகள்" முதலியவற்றின் வழியாகவும் நிலைநாட்டப்பட்டுள்ளன.

ஆன்மீக வேடத்தில் நீங்கள் இருந்தபோதிலும், கொள்ளைக் கூட்டம் வழக்கமாகக் கையாளும் முறைகளை, கையாளும் நடைமுறையை உடையவர்கள் நீங்கள் என்பது உங்களால் மறுக்க முடியாத உண்மையாகிறது.

இந்த உலக அரசுகளை உங்கள் காலடியில் நீங்கள் வைத்துக் கொண்டு, எவ்வளவுதான் நீங்கள் செயல்பட்டபோதிலும், இப்பேரண்டத்தை ஆளும் இறைவனுடைய ஆட்சிக்கு எதிராக

"நானே கடவுள்" என்ற கொள்கையில் செயல்படும் **உங்கள் மடங்களை, இறைவன் தம்முடைய நாசியின் சுவாசத்தால் அழிக்க வல்லவராய் இருக்கின்றார் என்பதை உங்களால் மறுக்க இயலாது என்பதே இப்பொழுது நாங்கள் உங்கள் முன் வைக்கும் சவாலாகும்.**

இந்த சவாலின் முன் உங்களால் நிற்க இயலாது என்பதை நாங்கள் அறிவோம். அதனால் இந்திய திராவிட மக்களை, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் இழிவுபடுத்தி, சீரழித்து, கொள்ளையடிக்கும் உங்கள் தவறான வழியிலிருந்து சைவ சித்தாந்தம் கூறுகின்றபடி மனம் திருந்தி, **இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு, வாழ்வடையுங்கள்** என்பதே இப்பொழுது உங்கள் முன் நாங்கள் வைக்கும் **வேண்டுகோள் ஆகும்.**

இந்த வேண்டுகோளில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவத்தால் பாராட்டப்படும் திருநீற்றை நெற்றியில் அணிந்திருக்கும் நீங்கள், தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ இலக்கிய நூலாகிய திருவிளையாடற் புராணத்திலுள்ள 'மாபாதகம் தீர்த்த படலத்தை'ப் படிக்கவும்"
என்பன அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தன.

2-4-2003இல் இக்கடிதத்தைப் பெற்றுக் கொண்டு, ஏறத்தாழ 1½ ஆண்டுகள் கழிந்த நிலையில், சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்டு, கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி சங்கரமடம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலாவது, கடிதத்திலுள்ள வேண்டுகோளின்படி மனம் திருந்தி, "இந்தியா தோமா வழித் திராவிடக் கிறிஸ்தவ நாடே" என்னும் உண்மையை உணர்ந்து, ஏற்றுக் கொள்ள சங்கரமடம் முன்வர வேண்டும்.

**பிரார்த்தனை :**

இந்தியாவில் 90% இருக்கும் இந்திய மண்ணின் மைந்தர்களான திராவிடர்களை இழிவுபடுத்தும் ஜாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையிலிருந்து, சங்கர மடத்தினரும் அதைச் சார்ந்தவர்களும் விடுதலை பெற்று மனம் திருந்த, அதே கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி 9-5-2003 முதல் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமைதோறும் இரவு 10 மணி முதல் காலை 5 மணிவரை முழுஇரவு பிரார்த்தனையை நடத்தி வருகின்றார்.

**திராவிட இனம் :**

ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் தமிழ் பேசப்பட்டு வந்தது. தமிழ் மொழியைப் பேசியவர்கள் 'தமிழர்' என்று அழைக்கப்பட்டனர்.

தமிழ் மொழியில் 'தமிழர்' என்று கூறப்பட்ட தமிழ்ப் பெயர் சமஸ்கிருத மொழியில் 'திராவிடர்' என்று குறிக்கப்பட்டது. வெளிநாட்டிலிருந்து வந்த ஆரியர் இந்திய மக்களான திராவிடர்களை, 1) ஆரியர்களுக்கு அடிபணிந்த ஆரிய அடிமைகள், 2) ஆரியரை எதிர்த்த ஆரியப் பகைவர்கள், என்ற நிலையில் சூத்திரர், பஞ்சமர் என்று இரண்டாகப் பிரித்தனர்.

இன்று இந்திய மக்கள் தொகையில் சூத்திரர் பஞ்சமர் என்று முத்திரை குத்தப்பட்ட திராவிடர்கள் 90% இருக்கின்றார்கள். வேற்றவர் வரவால் தமிழ் மொழியும், தமிழ் இனம் என்னும் திராவிட இனமும், பல பாதிப்புகளை அடைந்து

1. தமிழ் மொழியைப் பேசும் தமிழர்களாகிய திராவிடர்கள் - தமிழ் நாட்டிலும்
2. தமிழ் மொழியிலிருந்து பிரிந்த திராவிட மொழிகளைப் பேசும் திராவிடர்கள் - தென் இந்தியாவிலும்
3. திராவிட மொழிகளை மறந்து வேற்று மொழிகளைப் பேசும் திராவிடர்கள் - வட இந்தியாவிலும்

பெரும்பான்மையாக வாழுகின்றார்கள்.

## திராவிட இன விடுதலை :

**'இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு'** என்னும் வரலாற்று உண்மையை உணர்ந்து, இந்திய மக்கள் தொகையில் 90% இருக்கும் திராவிட இனம், ஆன்மீக விடுதலையும் அரசியல் விடுதலையும் பெறும் காலம் நெருங்கிவிட்டது என்பது டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களுக்கு கடவுள் கொடுத்த வெளிப்பாட்டின் விளைவு ஆகும்.

## இறையரசு :

திராவிட இனத்தின் ஆன்மீக விடுதலை, *ஒரே மந்தையும் ஒரே ஆயரும்* என்ற உலகளாவிய ஆன்மீக விடுதலைக்கு வழி வகுக்கும். அதன் பயனாக அன்பையும் அமைதியையும் அடிப்படையாகக் கொண்ட இறையரசு இவ்வுலகில் முழுமையடையும். முழுமையான இறையரசு உருவாக ஒன்றிணைந்து பாடுபடுவோமாக.



**- எஸ். சந்திரசேகரன்**
*திராவிட ஆன்மீக இயக்கம்*

மேலே கூறப்பட்டுள்ள செய்திகளை அறிந்துகொண்ட

# உங்கள் பங்கு என்ன?

**'இந்தியா, தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு'** என்பது நிலைநாட்டப்பட்டுள்ள வரலாற்று உண்மையாகும்.

இந்திய மதங்களையும் இந்திய மக்களையும் சீரழிக்கும் இந்துத்துவாவின் பிடியிலிருந்து இந்திய மக்கள் விடுவிக்கப்படல் வேண்டும்.

இந்திய மக்கள், இந்துத்துவாவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமானால்,

'இந்தியா, தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடு' என்னும் வரலாற்று உண்மை இந்திய மக்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும்.

**இப்பெரும் பணியில் உங்களுடைய பங்கு என்ன?**

1. முதலில் நீங்கள் இந்த வரலாற்று உண்மையை முறையாகப் புரிந்து கொள்ள முயலவேண்டும் அல்லவா?
2. இதைப் புரிந்து கொள்ள முயலும்பொழுது நீங்கள் இதற்குரிய ஆராய்ச்சி நூல்களைப் படிக்க வேண்டிய கடமை உங்களுக்கு ஏற்படுகிறது அல்லவா?
3. நீங்கள் இந்த உண்மையைப் படித்து அறிந்து கொண்ட பின்னர், உங்களுடைய நண்பர்களுக்கு இதை அறிவிக்க நீங்கள் முன்வர வேண்டுமல்லவா?
4. தேவை ஏற்பட்டால் உங்கள் நண்பர்கள் இந்த ஆராய்ச்சி நூல்களைப் படிக்க நீங்கள் ஒழுங்கு செய்ய வேண்டுமல்லவா?
5. இதைப் பற்றிய, கலந்துரையாடல், கருத்தரங்கம், வகுப்புகள் முதலியவற்றை நீங்கள் ஒழுங்கு செய்வதும், நடத்துவதும் உங்கள் கடமையாகும் அல்லவா?

இந்த நோக்கில் முதலில் உங்களுடைய ஜெபமும், இரண்டாவது உங்களுடைய ஒத்துழைப்பும் தேவை.

*- திராவிட ஆன்மீக இயக்கம்.*

## ஆய்வாளர்கள் படிக்க வேண்டிய ஆய்வேடுகளும் நூல்களும்

### இந்நூல் தொடர்பான டாக்டர் பட்ட (பிஎச்.டி.,) ஆய்வேடுகள்

1. விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் - ஒப்பாய்வு
   - டாக்டர் மு. தெய்வநாயகம் எம்.ஏ., பிஎச்.டி.,
   சென்னைப் பல்கலைக் கழகம், 1983

2. தமிழ்ப் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - விவிலிய ஒளியில்
   - டாக்டர் தெ. தேவகலா எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   சென்னைப் பல்கலைக் கழகம், 1993

### டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களின் நூல்கள்

1. இந்துத்துவாவின் பிடியிலிருந்து இந்து மதத்தை விடுவிப்பது எவ்வாறு? (மு.ப. செப்டம்பர் 2003)
2. சரியான சின்னம் எது? திருநீறா? சிலுவையா? (மு.ப.2002) (சரியான சின்னம் சிலுவையன்று; திருநீறே. எவ்வாறு?)
3. பைபிள் கூறும் சைவ உணவின் வரலாறு (மு.ப. ஜனவரி 2004)
4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மதம் எது? (மு.ப. 1992)
5. சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன்? (மு.ப. ஏப்ரல் 1996)
6. சங்கரமடத்துக்கு 108 கேள்விகள் (மு.ப. மே 1996)
7. சங்கரமடத்திற்கு ஒரு சவால் (மு.ப. ஜனவரி 2004)
8. கடவுள் இருக்கிறாரா? (மு.ப. செப்டம்பர் 1997)
9. *India in Third Millennium, (First Ed. May 2000)*
10. சிவஞானபோதம் - விளக்கம் (மு.ப. 1982)
11. திராவிட அரசியல் கட்சிகள் கொள்கைகளைக் கைவிட்டது ஏன்? (மு.ப. மே 1999)
12. உலக மொழிகளில் சிறந்தது தமிழ் - எவ்வாறு? (மு.ப. ஜூலை 2007)
13. தமிழர் சமயத்தை விடுவிக்கப் போவது யார்? (மு.ப. அக்டோபர் 2007)

## டாக்டர் மு. தெய்வநாயகம் &
## டாக்டர் தெ. தேவகலா அவர்களின் நூல்கள்

14. Hindu Religion is the offshoot of St. Thomas Dravidian Christianity. (F.Ed.2003)
15. International Racism is the Child of India's Casteism - A Historical Perspective and an Appeal to U.N.O. (F.Ed. May 2001)
16. Who are the Indian Dalits? (F.Ed. 2002)
17. Christianity in Hinduism (F.Ed. 1997)
18. Creeds and Doctrines of Trinity in St. Thomas Dravidian Christianity (F.Ed Agust 2005)
19. திராவிடர் சிந்தனையில் பிள்ளையார்
- டாக்டர் தெ. தேவகலா (மு.ப. ஜனவரி 2004)

## "திருக்குறள் தோமா வழி
## திராவிடக் கிறிஸ்தவ நூலே"

என்னும் மையக் கருத்தை நிலைநாட்டி டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் எழுதிய பிற நூல்கள்

20. திருவள்ளுவர் கிறிஸ்தவரா? (மு.ப. ஏப்ரல் 1969)
21. வள்ளுவர் வாழ்த்தும் ஐந்தவித்தான் யார்? (மு.ப. 1970)
22. வள்ளுவர் வாழ்த்தும் நீத்தார் யார்? (மு.ப. அக்டோபர் 1971)
23. வள்ளுவர் வாழ்த்தும் வான் எது? (மு.ப. அக்டோபர் 1971)
24. சான்றோர் யார்? (மு.ப. ஏப்ரல் 1972)
25. எழுபிறப்பு (மு.ப. அக்டோபர் 1972)
26. வள்ளுவர் வாழ்த்தும் இயல்புடைய மூவர் யார்? (மு.ப. ஏப்ரல் 1974)
27. அருட்செல்வம் யாது? (மு.ப. 1974)
28. பேரின்ப விளக்கம் (பொதுமறையும் பொருளிலக்கணமும்) (மு.ப. அக்டோபர் 1975)
29. திருக்குறளும் பைபிளும் (மு.ப. ஆகஸ்ட் 1980)

தொடர்பு முகவரி

*திராவிட ஆன்மீக இயக்கம்*

278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை- 600 023.
தொலைபேசி: 044 - 26449032. Email:dravida@eth.net
Website: http://www.geocities.com/dravidian_religion